# இராணி மேரி கல்லூரி வளாகத்தில் மாணவியர் விடுதி கட்டடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்... முதல் பக்கத் தொடர்ச்சி

**சென்னை, இராணி மேரி கல்லூரியில் கட்டப்பட்டுள்ள விடுதிக் கட்டடம்**

இராணி மேரி கல்லூரியில் 22.11.2022 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம், இராணி மேரி கல்லூரி வளாகத்திலேயே மாணவியர் தங்கிப் படிப்பதற்கு ஏதுவாக விடுதி ஒன்றைக் கட்டித்தர வேண்டும் என மாணவியர்கள் கோரிக்கை வைத்தனர். அக்கோரிக்கையினை உடனே ஏற்றுக் கொண்டு விழா மேடையிலேயே விடுதி கட்டித் தரப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்படி, சென்னை, இராணி மேரி கல்லூரியில் 42 கோடி ரூபாய் செலவில், நவீன வசதிகளுடன் 455 மாணவியர் தங்கிப் படிக்கும் வகையில் கட்டப்பட்டுள்ள விடுதிக் கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார். பின்னர், அங்கு பயிலும் மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

இவ்விடுதியின் தரைத்தளத்தில் பத்து அறைகள், கருத்தரங்க அறை, மின்தூக்கிகள், சிசிடிவி கேமராக்கள், நவீன சமையல் அறை, உணவு அருந்தும் கூடம், தேவையான மருத்துவச் சேவையினை மாணவியர் பெற மருத்துவர் அறை என அனைத்து நவீன வசதிகளுடன் இவ்விடுதி கட்டப்பட்டுள்ளது.

**திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்**

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 4 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 வகுப்பறைகள், 3 ஆய்வகங்கள் மற்றும் 3 கழிவறைத் தொகுதிக் கட்டடங்கள்;

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, அழகப்ப செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 1 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் ஒரு கழிவறைத் தொகுதி கட்டடம்;

கிருஷ்ணகிரி, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 6 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 கூடுதல் வகுப்பறைகள், 5 ஆய்வகங்கள், 2 பணிமனைகள் மற்றும் 2 கழிவறைக் கட்டடங்கள்;

தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி, அரசு பொறியியல் கல்லூரியில் 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1 புதிய ஆய்வகம், ஒரு பணிமனை மற்றும் 2 கழிவறைத் தொகுதிக் கட்டடங்கள்;

கடலூர் மாவட்டம், கூடுவெளி அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் ஆய்வகக் கட்டடம் மற்றும் கழிவறைத் தொகுதிக் கட்டடம்;

தூத்துக்குடி, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் 2 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 வகுப்பறை கட்டடங்கள் மற்றும் ஒரு ஆய்வகக் கட்டடம்;

சென்னை பல்கலைக்கழகத்தின் மெரினா வளாகத்தில் 28 கோடியே 5 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதுநிலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம்;

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 ஆய்வகக் கட்டடங்கள்;

பெரம்பலூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 4 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 14 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்;

புதுக்கோட்டை மாவட்டம், பெருநாவலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 24 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்;

சிவகங்கை அரசு பெண்கள் கலைக் கல்லூரியில் 1 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 ஆய்வகங்கள் மற்றும் பெண்களுக்கான கழிவறைக் கட்டடம்;

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 7 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 25 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்;

வேலூர் மாவட்டம், குடியாத்தம் அரசு திருமகள் ஆலை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 5 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 14 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வகக் கட்டடங்கள்;

தென்காசி மாவட்டம், சுரண்டை, காமராஜர் அரசு கலை கல்லூரியில் 3 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 14 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்;

**என மொத்தம் 120 கோடியே 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட உயர்கல்வித் துறை கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**அடிக்கல் நாட்டப்பட்ட கட்டடங்களின் விவரங்கள்**

சென்னை, மைய தெழில்நுட்ப வளாகத்தில், மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்காக 25 கோடி ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள மாணவர்களுக்கான கூடுதல் விடுதிக் கட்டடம்;

ஈரோடு, அரசு பொறியியல் கல்லூரியில் 14 கோடி ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள மாணவர்களுக்கான கூடுதல் விடுதிக் கட்டடம்; கோயம்புத்தூர், அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் 21 கோடி செலவில் கட்டப்படவுள்ள மாணவர்களுக்கான கூடுதல் விடுதிக் கட்டடம்; கோயம்புத்தூர், அண்ணா பல்கலைக்கழகத்தில் 16 கோடியே 33 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள கல்வித் தொகுதி கட்டடங்கள்;

சென்னை, குரோம்பேட்டை அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 4 கோடியே 31 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 6 ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் 2 கழிவறைத் தொகுதிகள்; சென்னை, தரமணி டாக்டர் தர்மாம்பாள் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 11 கோடி ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள கல்விசார் கட்டட தொகுதி; சேலம், அரசு பொறியியல் கல்லூரியில் 1 கோடியே 95 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 6 கழிவறைத் தொகுதிகள்;

ஈரோடு, அரசு பொறியியல் கல்லூரியில் 4 கோடியே 12 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 2 வகுப்பறைகள், 4 ஆய்வகங்கள் மற்றும் 4 கழிவறைத் தொகுதிகள்; கோயம்புத்தூர், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 9 கோடியே 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள முதலாமாண்டு அறிவியல், செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறைக்கான கட்டடங்கள்;

மதுரை, தமிழ்நாடு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 4 கோடியே 54 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 4 வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் உயர்திறன்மைய தொழில்நுட்ப ஆய்வக கட்டிடம் மற்றும் பிளாஸ்டிக் உருவாக்குவதற்கான ஆய்வகக் கட்டடம்;

மதுரை, செக்கானூரணி அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 3 ஆய்வகக் கட்டடங்கள்; வேலூர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 2 கோடியே 33 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 6 வகுப்பறைகள் மற்றும் 2 கழிவறைத் தொகுதிகள்;

கிருஷ்ணகிரி, பர்கூர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 2 கோடியே 33 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 3 ஆய்வகங்கள் மற்றும் 2 கழிவறைத் தொகுதிகள்; கிருஷ்ணகிரி, பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் 1 கோடியே 67 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 2 ஆய்வக கட்டடங்கள் மற்றும் 2 கழிவறைத் தொகுதிகள்;

சென்னை, காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில் 2 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்; செங்கல்பட்டு, இராஜேஸ்வரி வேதாச்சலம் அரசு கலைக் கல்லூரியில் 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் கழிவறைத் தொகுதிகள்;

சென்னை, இராணி மேரி கல்லூரியில் 2 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்; கோயம்புத்தூர், அரசு கலைக் கல்லூரியில் 4 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 10 வகுப்பறைக் கட்டடங்கள்;

கோயம்புத்தூர், தொண்டமுத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 6 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் ஆழ்துளை கிணறு; திருப்பூர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் 4 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 10 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 2 கழிவறைத் தொகுதிகள்;

நீலகிரி, கூடலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 7 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 12 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 2 கழிவறைத் தொகுதிகள்; நாமக்கல், குமாரபாளையம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 4 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 10 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 2 கழிவறைத் தொகுதிகள்;

சேலம், அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 1 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள ஒரு ஆய்வகக் கட்டடம் மற்றும் ஒரு ஆழ்துளை கிணறு; திண்டுக்கல், கொடைக்கானல் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 8 வகுப்பறைக் கட்டடங்கள்;

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 6 வகுப்பறைக் கட்டடங்கள்; அரியலூர், அரசு கலைக் கல்லூரியில் 8 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 20 வகுப்பறைகள், 2 கழிவறைத் தொகுதிகள் மற்றும் 2 ஆழ்துளை கிணறுகள்;

தஞ்சாவூர், குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 6 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 2 ஆய்வகங்கள்; திருவாரூர், நன்னிலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 6 வகுப்பறைக் கட்டடங்கள்;

திருவாரூர், திருத்துறைபூண்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 2 வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வகக் கட்டடங்கள்;

கடலூர், விருத்தாச்சலம் திரு.கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் 4 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 6 கூடுதல் வகுப்பறைகள், 2 ஆய்வகங்கள் மற்றும் 2 கழிவறை தொகுதிகள்; கடலூர் பெரியார் அரசு கலைக் கல்லூரியில் 3 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 8 கூடுதல் வகுப்பறைகள்; நாகர்கோவில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 6 வகுப்பறைகள்;

வேலூர், முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரியில் 5 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 10 கூடுதல் வகுப்பறைகள், 2 ஆய்வகங்கள் மற்றும் 2 கழிவறைத் தொகுதிகள்;

விழுப்புரம் டாக்டர் எம்.ஜி.ஆர் மகளிர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 6 வகுப்பறைகள்; விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் 4 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 6 வகுப்பறைகள், 3 ஆய்வகங்கள் மற்றும் 2 கழிவறைத் தொகுதிகள்;

திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 6 வகுப்பறை கட்டடங்கள் மற்றும் ஆழ்துளை கிணறு; தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 4 ஆய்வகங்கள், 3 கழிவறை தொகுதிகள் மற்றும் ஒரு ஆழ்துளை கிணறு;

**என மொத்தம் 207 கோடியே 82 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள உயர்கல்வித்துறை புதிய கட்டடங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் பி. வில்சன் அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை, இராணி மேரி கல்லூரி வளாகத்தில் கட்டப்படவுள்ள கலையரங்கத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள்

திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், பி. வில்சன், சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி. ஜெ.இன்னசன்ட் திவ்யா, இராணி மேரி கல்லூரி முதல்வர் முனைவர் பி. உமா மகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# சிவகங்கை அருகே கல்குவாரியில் மணல் சரிந்ததில் 5 பேர் உயிரிழப்பு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விரைந்து நிவாரணப்பணிகளை மேற்கொண்டார்!

*சிவகங்கை, மே 21-*

*சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி தாலுகா மல்லாக்கோட்டையில் தனியார் கல்குவாரி நிறுவனம் உள்ளது. இந்த பகுதியில் தொடர்ந்து கடந்த ஐந்து தினங்களாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் இந்த கல்குவாரியில் நேற்று காலைபணிகள் நடைபெற்று கொண்டிருந்தது எதிர் பாராத விதமாக கல்குவாரியிலிருந்து மண்சரிவு ஏற்பட்டது. இதில் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த அர்ஜித், குழிசேவல்பட்டியைச் சேர்ந்த கணேஷ், ஒடைபட்டியைச் சேர்ந்த முருகானந்தம், இ.மலம்பட்டி கிராமத்தைச் கிராமம் சேர்ந்த ஆறுமுகம், ஆண்டிச்சாமி, ஆகிய ஐந்து பேர் மண் சரிந்ததில் உயிரிழந்தார்கள்.*

*இதில் அர்ஜித் உடல் மட்டும் எடுக்க முடியவில்லை. இறந்துபோன கணேஷ், முருகானந்தம், ஆறுமுகம், ஆண்டிச்சாமி ஆகியோரின் உடல் மீட்கப்பட்டு சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரிக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.*

*இதில் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த மைக்கேல் பலத்த காயமடைந்த நிலையில் மதுரை மீனாட்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.*

*இதுபற்றிய தகவல் கிடைத்ததும் சிவகங்கை அரசு நிகழ்ச்சியில் இருந்த அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நிகழ்ச்சிகளை விரைவாக முடித்துக் கொண்டு மல்லாகோட்டை தனியார் கல்குவாரிக்கு விரைந்து வந்தார். அங்குநிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை பார்வையிட்டார். இறந்துபோனவர்களின் உடல்களை உடனடியாக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கும் படி கூறினார். இறந்து போனவர்களின் உடல்களை உறவினர்கள் பார்ப்பதற்கு காவல்துறையினரிடம் அனுமதிக்குமாறு கூறினார். இறந்து போனவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல்கூறினார். இந்த விபத்து குறித்து முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நிவாரண உதவி உதவிகளை பெற்றுத் தருவதாக உறுதி கூறினார். இந்த மீட்பு பணிகளில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு ஆஷிஸ் ராவத், தேவகோட்டை உதவி ஆட்சியர் ஆயூஷ் வெங்கட், டிஎஸ்பி செல்வகுமார் மற்றும் தீயணைப்பு காவல்துறையினர் மீட்பு பணியை மேற்கொண்டார்கள்.*

*இதில் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த அர்ஜித் என்பவர் மட்டும்இடிபாடுகளில் சிக்கி உள்ளார். அவரது உடலை மீட்க முடியவில்லை. இதற்காக திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து மீட்புப் பணியினர் வரவழைக்கப்பட்டு உள்ளனர்.*

*அமைச்சர் பெரியகருப்பன் கல்குவாரியில் முகாமிட்டு வேண்டிய உதவிகளை செய்து வருகிறார்.*



சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி தாலுகா மல்லாக்கோட்டையில் தனியார் குவாரியில் ஏற்பட்ட பாறைசரிவுப் பணியில் உயிரிழந்தவர்களை மீட்கும் நிவாரண பணியினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஸ்ராவத் ஆகியோர் உள்ளனர்.

---

# அம்பத்தூரில் அறுசுவை உணவு வழங்கல்!

*சென்னை, மே 20-*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 89வது நாள் அம்பத்தூர் வடக்கு பகுதி - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 89 ஆம் நாளாக அம்பத்தூரில் உணவு வழங்கப்பட்டது.*

---

# தி.மு.க. இளைஞர் அணி

**இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் மத்திய ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளர் தெய்வா (எ) தெய்வச்செயல் (த/பெ ரத்தினம், 150/1, 172, பெரிய தெரு, காவனூர் குடியிருப்பு (அ), அரக்கோணம்) அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக, ம.கவியரசு (த/பெ மனுவேல், 199, சி.எஸ்.ஐ. பள்ளிக்கூடத் தெரு, காவனூர், அரக்கோணம்) என்பவர், அந்தப் பொறுப்பில் நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் இவருடன் இணைந்து கழகப் பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**"அன்பகம்"**
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 19-05-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி